## சுருக்கம்

நிர்வாகம்– மருத்துவக் கல்வி இயக்குநரகம் – மருத்துவக் கல்வி இயக்குநரக கட்டுப்பாட்டின் கீழுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் பணிபுரியும் 15 உயிரி மருத்துவப் பொறியாளர்களுக்கு (Bio Medical Engineer) ஒப்பந்த ஊதியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநல (அஉதி I–1) துறை

அரசாணை (D) எண்.673

நாள்:30.06.2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய ஆனி–16

படிக்க:

1. அரசாணை (2D) எண்.24, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (EAPI/II) துறை, நாள்:16.02.2012.
2. அரசாணை (2D) எண்.28, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (EAPI/I) துறை, நாள்:28.03.2013.
3. மருத்துவக் கல்வி இயக்குநரின் கடித எண்.26998 / நி5/ 3/2014, நாள்:02.05.2014

ஆணை

பார்வை ஒன்றில் காணும் அரசாணையின் படி, மருத்துவக் கல்வி இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் ஒப்பந்த அடிப்படையில் 15 உயிரி மருத்துவப் பொறியாளர்கள் (Bio Medical Engineer) பணிபுரிந்து வருகிறார்கள் எனவும் அவர்களுக்கான ஒப்பந்த ஊதியம் ஊதிய உயர்வு கீழ்க்கண்டவாறு ஆகும் என மருத்துவக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| உயிரி மருத்துவ பொறியாளர்கள் (BME) | மொத்த எண்ணிக்கை | மாத ஊதியம் | ஊதிய உயர்வு | மாத செலவு |
|---|---|---|---|---|
| | 15 | 23,100 | 1155 | 24255 X 15 = ரூ.3,63,825/– |

ஒரு மாத செலவு X 12 = வருடாந்திர செலவு
3,63,825 X 12 = ரூ.43,65,900/–
(ரூபாய் நாற்பத்தி மூன்று லட்சத்து அறுபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)

2. மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் 2014–2015–ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் ரூ.43,65,900/–ஐ உயிரி மருத்துவப் பொறியாளர்களுக்கு (Bio Medical Engineer) ஒப்பந்த ஊதியம் வழங்க நிதிஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மருத்துவக் கல்வி இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் பணிபுரியும் 15 உயிரி மருத்துவப் பொறியாளர்களுக்கு (Bio Medical Engineer) ஒப்பந்த ஊதியம், வழங்க ரூ.43,65,900/– (ரூபாய் நாற்பத்தி மூன்று லட்சத்து அறுபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) 2014–15ம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

2210 – மருத்துவமும் பொது சுகாதாரமும் 01 நகர்ப்பகுதி சுகாதாரப் பணிகள் ஆங்கிலமுறை மருத்துவம் – 110. மருத்துவமனைகளும் மருந்தகங்களும் I திட்டத்தில் சேராதது. DZ மருத்துவ உபகரணங்களை பராமரித்தல் 33– தொழில் முறை, சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 – ஒப்பந்த ஊதியம் (து.தொ.கு. 2210-01-110-DZ-3342)

5. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் 2014–2015–ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு இறுதி திருத்த மதிப்பீட்டில் நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2014–2015ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்ற பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதி ஒதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட இக்கருதல் செலவிற்கான உரிய கருத்துருவை 2014–2015–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் திருத்தய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் கருத்துருவை நிதித் (சுகாதாரம்–II) துறைக்கு அனுப்பிவைக்குமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.32769/H-II/14 நாள்:27.06.2014ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.619 (அறுநூற்று பத்தொன்பது)

/ஆளுநரின் ஆணைப்படி/

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
நகல்
நிதி (சுகாதாரம்–II / வ.செ–I/ II) துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தரகு பிரிவு) துறை, சென்னை–9.
சுந/இகோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்